பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**08 08 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட சுயதொழிலை மேம்படுத்த வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

2. பிரிக்ஸ் உறுப்பு நாடுகளுக்கு இடையே கலாச்சார ஒத்துழைப்பை வலுப்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவாத் தெரிவித்துள்ளார்.

3. நாட்டில் **300 Gigawatt** புதைபடிவமற்ற எரிபொருள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

4. சூடானில் பள்ளிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

5. இலங்கை **Eleven** அணிக்கு எதிரான பயிற்சி கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் **6** விக்கெட் இழப்பிற்கு **357** ரன் எடுத்துள்ளது.

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட சுயதொழிலை மேம்படுத்த வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மும்பையில் தேசிய நகர்ப்புற கூட்டுறவு நிதி மேம்பாட்டுக் கழகத்தின் புதிய அலுவலகத்தை திறந்துவைத்து பேசிய அவர், இதற்காக நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் பங்கு மிகவும் முக்கியமானது என்று கூறினார்.

தேசிய நகர்ப்புற கூட்டுறவு நிதி மேம்பாட்டுக் கழகத்துடன், அனைத்து நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

கூட்டுறவு வங்கிகள் வருவாய்க்கு மட்டுமின்றி, மக்கள் சேவைக்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

தேசிய நகர்ப்புற கூட்டுறவு நிதி மேம்பாட்டுக் கழகத்தின் தலைமையகம் விரைவில் தில்லியிலிருந்து மகாராஷ்ட்ராவிற்கு மாற்றப்படும் என்று அவர் கூறினார்.

நாட்டில் உள்ள 70 சதவீத நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள், மகாராஷ்ட்ரா மண்டலத்தில் செயல்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

நகர்ப்புற கூட்டுறவு வங்கிச்சேவை நவீனமயமாக்கப்படுவதுடன் வெளிப்படைத் தன்மையுடனும், நம்பகத் தன்மையுடனும் செயல்பட நடவடிக்கை எடுத்து வருவதாக திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற அனைத்து கட்சிகளும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மக்களவையிலும், மாநில சட்டப்பேரவைகளிலும் மகளிர் இடஒதுக்கீட்டிற்கு அகாலிதள் கட்சி ஆதரவு அளிக்கும் என்ற அறிவிப்பை வரவேற்பதாக கூறியுள்ளார்.

சண்டிகரில் நடைபெற்ற சிரோன்மணி அகாலிதள் மாநாட்டில் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதாக அக்கட்சித் தலைவர் திரு சுக்பீர் சிங் பாதல் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளுக்கு இடையே கலாச்சார ஒத்துழைப்பை வலுப்படுத்த முடிவடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவாத் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் இன்று நடைபெற்ற **11**-ஆவது பிரிக்ஸ் கலாச்சார அமைச்சர்கள் மாநாட்டில் இதற்கான பிரகடனம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நாட்டுப்புற இசை, கலாச்சார பாரம்பரியம், மொழிகள் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கலாச்சார பாரம்பரியத்தை பேணிகாக்க அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் திரு கஜேந்திர சிங் ஷெகாவாத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், பிரிக்ஸ் அமைப்பின் பத்து உறுப்பு நாடுகள் உட்பட **14** நாடுகள் கலந்துகொண்டுள்ளன.

பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே கலாச்சார உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக இதில் முக்கியமாக விவாதிக்கப்பட்டது.

இதன்மூலம், உறுப்பு நாடுகளின் கலைஞர்களுக்கு கூடுதல் வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

<<<<<<>>>>>

நாட்டில் **300 Gigawatt** புதைபடிவமற்ற எரிபொருள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருவதாக மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த **12** ஆண்டுகளில் நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் **400** சதவீதம் அதிகரித்துள்ளதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் திட்டங்கள் மூலம் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தூய்மையான எரிசக்தி உற்பத்தியில் இந்தியா உலக அளவில் முன்னணி நாடாக திகழ்வதாக திரு பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசின் திட்டங்கள் மூலம் **300 Gigawatt** புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி என்ற சாதனையை படைத்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கடந்த **2014**-ஆம் ஆண்டில் புதைபடிவமற்ற எரிபொருள் மூலம் **75 Gigawatt** மின்சாரம் உற்பத்தி செய்துள்ள நிலையில், தற்போது அது **300 Gigawatt** எட்டியதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

பீகாரிலிருந்து முதல் முறையாக **18** மெட்ரிக் டன் தாமரை விதைகள் ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், **Darbhanga** விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

இதன்மூலம், விவசாயிகளுக்கு சந்தை விலையை விட **18** சதவீதம் அதிக லாபம் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

வேளாண் மற்றும் உணவு பதப்படுத்துதல் ஏற்றுமதி ஆணையம் வழியாக, இந்த ஏற்றுமதி செய்யப்பட்டதாக திரு பியூஷ் கோயல் கூறினார்.

<<<<<<>>>>>

மேற்காசிய பகுதியிலிருந்து **4** ஆயிரத்து **48** இந்திய மாலுமிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மாலுமிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று பிரதமர் உத்தரவிட்டுள்ளதை எடுத்துரைத்தார்.

நாட்டின் கடல்சார் துறையின் வளர்ச்சியில் மாலுமிகளின் பங்கு இன்றியமையாதது என்று அவர் கூறினார்.

இந்தியா கப்பல் போக்குவரத்தில் முன்னணி நாடாக திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியின்போது, டிஜிட்டல் கடல்சார் தகவலுக்கான **eSamudra** செயலியை திரு சர்பானந்த சோனாவால் தொடங்கிவைத்தார்.

மாலுமிகள் கப்பல் நிறுவனங்கள், துறைமுகங்கள் இடையே தடையற்ற தகவல் பரிமாற்றத்திற்கு இச்செயல் வழிவகை செய்யும் என்று அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய கப்பல் போக்குவரத்துத் துறைமுகங்கள் துறை செயலர் திரு விஜய்குமார், கடந்த ஆண்டில் மட்டும் **3** லட்சத்து **23** ஆயிரம் இந்திய மாலுமிகள் சேவையாற்றி வருவதாக கூறினார்.

<<<<<<>>>>>>

சூடானில் பள்ளிகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, நியூயார்க்கில் பேசிய ஐ நா-வுக்கான இந்திய ஆலோசகர் **Eldos Mathew,** சூடானில் கடந்த மூன்றாண்டுகளில் நடைபெற்றுவரும் உள்நாட்டு பிரச்சினைகள் காரணமாக ஒரு கோடியே **70** லட்சம் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இப்பகுதிகளில் குழந்தைகளின் கல்வி உரிமையை பாதுகாக்க இந்தியா உறுதிபூண்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

சூடானில் பள்ளிகள் மீதான தாக்குதல் **57** சதவீதம் அதிகரித்துள்ளதாக ஐ நா அறிக்கையை மேற்கோள்காட்டி அவர் சுட்டிக்காட்டினார்.

சோமாலியா, கோங்கோ, லைபீரியா உள்ளிட்ட நாடுகளின் ஐ நா தூதரகங்கள் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

<<<<<<>>>>>

அமெரிக்காவின் அரசு தலைமை வழக்கறிஞராக **Todd Blanche-**ஐ அந்நாட்டு **Senate** தேர்ந்தெடுத்துள்ளது.

அமெரிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்பின் முன்னாள் வழக்கறிஞரான Todd Blanche-க்கு ஆதரவாக 50 வாக்குகளும், எதிராக 49 வாக்குகளும் பதிவாயின.

கடந்த ஏப்ரல் மாத த்தில் இப்பதவியில் இருந்த Pam Bondi -ஐ அதிபர் திரு ட்ரம்ப் நீக்கியதையடுத்து, புதிய அரசு தலைமை வழக்கறிஞர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

<<<<<<>>>>>

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அந்நாட்டு ராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதுதொடர்பாக, செய்தியாளர்களிடம் பேசிய ஏமன் ராணுவ செய்தித் தொடர்பாளர் கர்னல் Majed, ஹவுதி தாக்குதலிலிருந்து மக்களை பாதுக்காக இந்நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

முன்னதாக, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதலில் 18 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து, ஏமன் ராணுவம் தாக்குதல் நடத்த முடிவெடுத்துள்ளது.

இந்த நடவடிக்கைக்கு ஏமன் மக்கள், ஆதரவு அளிக்க வேண்டும் என்று அந்நாட்டு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இலங்கை **Eleven** அணிக்கு எதிரான மூன்று நாள் பயிற்சி கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்சில் **6** விக்கெட் இழப்பிற்கு **357** ரன் எடுத்துள்ளது.

கொழும்பில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இந்தியாவின் **Devdutt Padikkal** அதிரடியாக ஆடி **142** ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

முன்னதாக, இலங்கை **Eleven** அணி முதல் இன்னிங்சில் **8** விக்கெட் இழப்பிற்கு **363** ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

---------

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், கோவை அணிக்கு எதிரான ஆட்டத்தில் **240** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிவரும் மதுரை அணி சற்றுமுன்வரை **15** ஓவரில் **3** விக்கெட் இழப்பிற்கு **177** ரன் எடுத்துள்ளது.

திண்டுக்கல்லில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், முதலில் பேட் செய்த கோவை அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **4** விக்கெட் இழப்பிற்கு **239** ரன் எடுத்துள்ளது.

சேலம்— திருச்சி அணிகளுக்கு இடையேயான போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

-----------

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா **3-1** என்ற கணக்கில் ஸ்பெயினை வென்றது.

**<<<<<<END>>>>>**